புலங்களில் செய்யப்பட்டுள்ள சிறு சிறு ஆக்கிரமிப்புகளை அகற்ற ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டு அந்த ஆக்கிரமிப்புகள் எல்லாம் தற்போது முழுமையாக அகற்றப்பட்டுள்ளன.

திருமதி ப. சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற எவிக்சன் பண்ணுவதற்கு வட்டாட்சியர் வருகின்ற நேரத்தில் அங்கு சிலர் பட்டாக்கள் வாங்கி வைத்திருக்கின்றோம் என்று ஆட்சேபணை தெரிவித்ததால் அந்த நடவடிக்கை எடுக்கப்படாமல் இருக்கிறது. ஆதி திராவிடர்கள் சடலத்தை கையால்தான் எடுத்துச்செல்லக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. வருவாய்த்துறையில் நடவடிக்கை எடுக்க இயலாதவாறு ஏற்கெனவே சிலர் பட்டா பெற்றுள்ளதால் அந்தப் பட்டாதாரர்களுக்கு ஈட்டுத் தொகையை ஆதி திராவிடர் நலத் துறை மூலம் தந்து, அங்கே ஒரு பீஸ் கமிட்டியை அமைத்தால்தான் அந்த நிலத்தை கையகப்படுத்த முடியும். காரணம் அங்கே வாழையும், வெற்றிலையும் பயிரிட்டுக் கொண்டு இருக்கின்ற காரணத்தினால், விலை உயர்ந்த நிலம் என்பதால் அங்கே சட்டம் ஒழுங்கு கெடக்கூடிய நிலை இருக்கின்ற காரணத்தால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுத்து, அந்த நிலத்திற்கு ஈட்டுத்தொகை தந்து, ஆதி திராவிடர்களின் நலனைக் காக்கின்ற அன்னையின் அரசு, அண்ணல் அம்பேத்கார் அவர்களுக்கு மணிமண்டபம் கட்டும் புரட்சித் தலைவியினுடைய அரசு விரைவில் அதற்கு ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று, நில ஆர்ஜிதம் செய்வதன் மூலம் இந்தக் கோரிக்கை நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 37, திரு. எச். எம். ராஜு, மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்.

SATYAMEVA JAYATE TRUTH ALONE TRIUMPHS

37—

சிவில் உரிமை பாதுகாப்புச் சட்டம் சிறந்த முறையில் செயல்பட பணியாளர்கள் நியமனம்.

*10821—திரு. எச். எம். ராஜு:

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவில் உரிமைப் பாதுகாப்புச் சட்டம் (Protection of Civil Rights Act) சிறந்த முறையில் செயல்பட, பற்றாக் குறையாக உள்ள பணியாளர்களை உடனடியாக நியமனம் செய்யும் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

1993 அக்டோபர் 27]

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாவை ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : குடியியல் உரிமைகள் பாதுகாப்புப் பிரிவுகளில் போதுமான பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்

திரு. எச். எம். ராஜூ : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வினாவை நான் சட்டமன்றத்திற்கு அனுப்பிய போது, மாநிலத்தில் பல இடங்களில் இடப்பற்றாக்குறை உள்ளது என்று அறிய வந்ததால் இந்த வினாவை எழுப்பினோம். இப்பொழுது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தப் பணியாளர்களை முழு அளவில் அமர்த்தியிருக்கிறோம் என்று சொன்னதற்கு மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த சிவில் உரிமைப் பாதுகாப்புச் சட்டம் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு சட்டம். ஏன் என்றால் மனித உரிமையும் இதிலே அடங்கியிருக்கிறது. இந்தச் சட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்குச் சிறந்த முறையிலே இந்தச் சட்டத்தை நாம் பயன்படுத்த வேண்டுமென்றால் கண்டிப்பாக இந்தத்துறையிலே பணியாளர்கள் எல்லாம் முழு அளவில் பணியில் இருக்க வேண்டும். எல்லா மாவட்டங்களிலும் இந்த சிவில் ரைட்ஸ் ஆக்ட் புரட்டக்சனுக்காக, நமது மக்களுக்கு நாம் சேவை செய்ய வேண்டுமென்றால், எந்த இடத்திலேயும் பணியாளர்கள் இல்லாமல் துன்பப்படக்கூடாது என்பதால், இனிமேல் எந்தெந்த சமயத்தில் இந்தப் பணியிடங்கள் காலியாகின்றனவோ அங்கே எல்லாம் உடனடியாக அந்தப் பணியிடங்களை உடனடியாக அரசு நிரப்புமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவில் உரிமைப் பாதுகாப்பில் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அக்கறை கொண்ட காரணத்தால்தான் இப்பொழுது அண்மையில்கூட ஐ.ஜி. அந்தஸ்த்தில் ஒரு ஐ.பி.எஸ். ஆபீசரை நியமித்திருக்கிறார் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். ஆகையினால் இந்த உரிமைகள் பராமரிக்கப்பட வேண்டும். பாதுகாக்கப்பட வேண்டும் என்பதனால்தான் அவ்வப்போது காலியாகும் இடங்களை தமிழக அரசு நிரப்பி வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. செ. கு. தமிழரசன்.

திரு. செ. கு. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் வழக்குகள் பல தேங்கிக் கிடப்பதை அரசு அறியுமா ? அதற்குக்

காரணமே இந்தத் துறையில் அலுவலர்கள் காவல் துறையிலிருந்து அங்கே டெபுட்டேசனாக வருகிறார்கள். அவர்கள் வருகிறபோதே இந்தத் துறையை ஏதோ நமக்கு அளிக்கப்பட்ட தண்டனை என்கிற அளவிலே அவர்களுடைய செயல்பாடு இருக்கிறது. எனவே, இதற்காகவே ஒரு தனித் துறையை அமைத்து இளம் வழக்கறிஞர்களை நியமித்து, இவற்றை வேகப்படுத்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-05

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட நலத் துறையின் வளர்ச்சியில் அக்கறை கொண்ட முதல்வரவர்கள் இப்போது ஐ.ஜி. அந்தஸ்தில் ஒரு ஐ.பி.எஸ். அதிகாரியை நியமித்துள்ளார்கள். இந்தத் துறையின் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்த வேண்டுமென்பதற்காகவே இது போன்று முதலமைச்சரவர்கள் நியமித்துக் கொண்டிருக்கிறார்கள். நிலுவையில் உள்ள வழக்குகளைச் சரி செய்வதற்காக சட்டத்துறை அமைச்சரும் நானும் கலந்து பேசியிருக்கிறோம். இதற்காக சிறப்பு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 38. திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்.

38—

திருத்தணி அருள்மிகு முருகன் கோவிலுக்கு பாதுகாப்புப் படை.

*16632—திரு. ஆர். சிங்காரம் :

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருத்தணி அருள்மிகு முருகன் திருக்கோவிலுக்குப் பாதுகாப்புப் படையும் எச்சரிக்கை மணியும் அமைத்துத்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

சட்டமன்றம் LEGISLATURE வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS